Minutes of the **Public Hearing** conducted on **12.09.2023** at 11.00 A.M. at Selva Sumangali Mahal, Sayerpuram, Thoothukudi District for the proposed Rough Stone & Gravel Quarry namely ***M/s. P. Ananthakumar Rough Stone and Gravel Quarry,*** S.F.No. 452/2, 452/3A, 452/3B & 452/4 Melathattapparai Village, Thoothukudi Taluk, Thoothukudi District **(Project-P1)** over an extent of 3.86.0 Ha & ***M/s. P. Ananthammal Rough Stone and Gravel Quarry,*** S.F.No. 457/5, Melathattapparai Village, Thoothukudi Taluk, Thoothukudi District **(Project-P2)** over an extent of 1.62.0 Ha

**Participants:**

| | | |
|---|---|---|
| 1. | Thiru.A.M.Kamatchi Ganesan | Special District Revenue Officer (L.A) Allikulam Project, SIPCOT Thoothukudi. |
| 2. | Thiru. J. Hamoneth Joesun, | District Environmental Engineer(i/c), Tamil Nadu Pollution Control Board, Thoothukudi. |
| 3. | Project Proponents and their representatives and the public | As per Attendance Register (A copy of the Attendance Register is attached in Annexure - II). |

At the outset, the District Environmental Engineer (i/c), Tamil Nadu Pollution Control Board, Thoothukudi welcomed the esteemed Special District Revenue Officer, SIPCOT, Thoothukudi who was present to preside over the public hearing meeting and also welcomed the project proponent and their representatives and all the public who were present to attend the public hearing meeting and explained the purpose of the meeting and also about the project. The details about the project, Environmental Management Plan and the mitigation measures to prevent the pollution related issues were explained on behalf of the Proponent by the Technical expert of the project. After this, the public expressed their views.

**I. Following are the views expressed by the public during the Public Hearing meeting:**

**1. Thiru. Lakshmanan, Keela Thattaparai.**

- No other employment opportunities is present in our locality.
- Hence, I request to provide clearance for these projects.

**2. Thiru. Ponnudurai, Mela Thattaparai village.**

- These quarries will create employment opportunities in our locality.

**3. Thiru. Muthukumaran, Keela Thattaparai village**

- Many quarries were closed in our area so that we are lacking employment opportunities and lorry drivers are also lacking work opportunities
- Hence, I request to provide clearance for these projects.

4. **Thiru. James, President, North Silukkanpatti village**

- These quarries in our area are providing employment to our people

**5. Thiru. Balasubramaniam, President, South Silukkanpatti village**

- The establishment of these quarries are good in the current scenario.

6. **Thiru. K. Raja, Ayyanaroothu village**

- There were 20 quarries in existence previously, now only 2 quarries are present in our locality
- Hence, I request to provide clearance for these projects.

7. **Tmt. Santhanamari, Mela Thattaparai village.**

- Due to no employment opportunities in the local area, all are supposed to go to other areas for working.
- Many people who are not getting any other pension are suffering in our area
- It will be highly helpful if license is provided to these quarries.

**8. Thiru. Shanmugasamy, Mela Thattaparai village.**

- No issues in the establishment of these quarries
- We are suffering due to non availability of employment opportunities.
- Hence, I request to provide clearance for these projects.

**9. Tmt. Vijayalakshmi, Mela Thattaparai village.**

- Many adults used to work in the quarries located in our locality.
- Now I request to make arrangement for providing jobs to them

**10. Tmt. Annalakshmi, Mela Thattaparai village**

- Thattaparai village is solely dependent on quarries for employment.
- Now, residents of these villages are required to go to Thoothukudi for work opportunities.
- Hence, I request to provide clearance for these projects.

**11. Thiru. Ponnusamy, Mela Thattaparai village.**

- Mela Thattaparai village residents are depending on the quarries for the last 40 years.
- Our village lacks rainfall and farming. Hence, I request to provide clearance to these projects for preserving the livelihood of the villagers.

**12. Thiru. Chithiraivel, Pudukottai village**

- I am having two tipper lorries and so I request to provide clearance to these projects for providing job opportunities to us.

**13. Thiru. Periasamy, Keela Thattaparai village.**

- We are dependent on the quarry for last 15 years.

- Now people are travelling around 5 kms for working in other places.
- Hence, I request to provide clearance for these projects.

**14. Tmt. Muniammal, South Silukkanpattii village.**

- We are working in 100 days job scheme.
- These projects will provide more employment

**15. Tmt. Pechiammal, Keela Thattaparai village.**

- I request to provide pure water to village residents.
- I request to make arrangements for drinking water connection to our village.

**II. Concluding remarks by the District Environmental Engineer (a/c).**

The District Environmental Engineer (i/c) consolidated the views received regarding the establishment of quarries such as employment opportunities for local residents and educated youths. Then the meeting was concluded by thanking all those who have attended the public hearing. The District Environmental Engineer (i/c) also stated that the minutes of the meeting will be sent to SEIAA through the Tamil Nadu Pollution Control Board Head office.

**III.** The views/comments received from the public in writing ( 32 Nos) in support of this proposed project are enclosed herewith (Annexure-III).

**IV.** No views/comments received from the public in writing against the proposed project.

**The following documents are enclosed herewith in connection with the public hearing:**

1. Pendrive consisting of the Recorded Video (2-Nos) of the entire public hearing proceedings (Annexure – I).
2. List of participants who attended the public hearing (Annexure – II).
3. Written views/comments received for this project (Annexure – III).

19/09/2023
District Environmental Engineer(i/c),
Tamil Nadu Pollution Control Board,
Thoothukudi.

19/09/2023
Special District Revenue Officer (L.A)
Alikulam Project, SIPCOT
Thoothukudi.

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தாலுகா, மேலத்தட்டப்பாறை கிராமம் புல எண்: 452/2, 452/3A, 452/3B & 452/4, 3.86.0 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமையவுள்ள முன்மொழியப்பட்ட திட்டமான *திரு/ள். P. ஆனந்தகுமார் கல் மற்றும் சரளை குவாரி (P1)* மற்றும் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தாலுகா, மேலத்தட்டப்பாறை கிராமம் புல எண்: 457/5, 1.62.0 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமையவுள்ள முன்மொழியப்பட்ட திட்டமான *திரு/ள். P. ஆனந்தம்மாள் கல் மற்றும் சரளை குவாரி (P2)* என்ற திட்டத்திற்கு 12.09.2023 காலை 11.00 மணிக்கு தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தாலுகா, புதுக்கோட்டை சத்யா மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள்:

பங்கேற்றவர்கள்:-

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆ.ம.காமாட்சி கணேசன் | தனி மாவட்ட வருவாய் அலுவலர்(நி.எ) அல்லிகுளம் திட்டப்பணிகள் சிப்காட் தூத்துக்குடி. |
| 2. | திரு.ஜே.ஹேமந்த் ஜோசன் எம்.டெக்., | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(பொ), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி. |
| 3. | தொழிற்திட்ட உரிமையாளர்கள் மற்றும் அவரது பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டின் படி (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) இணைப்பு - II |

முதலாவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ) , தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி அவர்கள் இந்த கூட்டத்தை தலைமை ஏற்று நடத்த வருகை தந்த மதிப்பிற்குரிய தனி மாவட்ட வருவாய் அலுவலர், அவர்களையும், இத்தொழிற்திட்டத்தின் உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளையும் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த அனைத்து பொதுமக்களையும் வரவேற்று இந்த கூட்டம் நடைபெறவுள்ளதின் நோக்கத்தையும் இந்த திட்டம் பற்றியும் எடுத்துரைத்தார். அதன்பின்பு இந்த திட்டம் பற்றி தொழிற்சாலையின் சார்பாக தொழில்நுட்ப விளக்கங்கள் மற்றும் எதிர்ப்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்துவிளக்கப்பட்டது. பின்பு பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

**I.இந்த கூட்டத்தில் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு:**

**1. திரு. லெட்சுமணன், கீழ தட்டப்பாறை.**

- உள்ளூர் கிராம மக்களுக்கு வேறு எந்தவித வேலை வாய்ப்பும் இல்லை.
- எனவே, இந்தத் திட்டங்களுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**2.திரு. பொன்னுதுரை, மேல தட்டப்பாறை**

- இந்த கல்குவாரியினால் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

**3.திரு. முத்துகுமரன், கீழதட்டப்பாறை**

- எங்கள் பகுதியில் பல கல்குவாரிகள் மூடப்பட்டதால் எங்களுக்கும் லாரி ஓட்டுனர்களுக்கும் வேலை வாய்ப்பு இல்லை.
- எனவே, இந்தத் திட்டங்களுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4. திரு.ஜேம்ஸ்,தலைவர், வடக்கு சிலுக்கன்பட்டி

- ❖ இந்த கல்குவாரியினால் எந்த பகுதி மக்களுக்கு வேலைவாய்ப் கிடைக்கும்.

5. திரு.பாலசுப்பிரமணியன், தலைவர், தெற்கு சிலுக்கன்பட்டி

- ❖ இங்கு குவாரிகள் அமைவது நல்லது.

6. திரு.K. ராஜா,அய்யனாரூத்து

- ❖ முன்பு எங்கள் பகுதியில் 20 குவாரிகள் இருந்தன, தற்போது 2 குவாரிகள் மட்டும் உள்ளது.
- ❖ ஆகையால், இந்த கல்குவாரி திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

7. திருமதி.சந்தனமாரி, மேலதட்டப்பாறை

- ❖ எங்கள் பகுதியில் வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தினால்,இந்த பகுதி மக்கள் வேறு இடங்களுக்கு வேலை தேடி செல்கின்றனர்.
- ❖ எங்கள் ஊர் மக்கள் பலர் ஓய்வுதியம் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள்.
- ❖ எனவே, இந்த குவாரிகளுக்கு உரிமம் வழங்குவதனால் மிகவும் உதவியாக இருக்கும்.

8. திரு. சண்முகசாமி, மேல தட்டப்பாறை

- ❖ இந்த குவாரி அமைவதனால் எந்தவித பாதிப்பும் இல்லை.
- ❖ நாங்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறோம்.
- ❖ ஆகையால், இந்த குவாரி திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

9. திருமதி. விஜயலெட்சுமி, மேல தட்டப்பாறை.

- ❖ எங்கள் பகுதி குவாரிகளில் பல வயதானவர்கள் வேலை செய்து வந்தனர்.
- ❖ இப்போது அவர்களுக்கு வேலைவாய்ப்பு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

10. திருமதி. அன்னலெட்சுமி, மேல தட்டப்பாறை.

- ❖ தட்டப்பாறை கிராம மக்கள் குவாரிகளை நம்பி வேலை செய்து வந்தனர்.
- ❖ தற்போது வேலை வேண்டி தூத்துக்குடிக்கு செல்கின்றனர்.
- ❖ ஆகையால், இந்த திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

11. திரு.பொன்னுசாமி, மேல தட்டப்பாறை.

- ❖ கடந்த 40 வருடங்களாக மேல தட்டப்பாறை கிராம மக்கள் குவாரிகளை நம்பியே வேலை செய்து வந்தனர்.
- ❖ தற்போது மழை இல்லாத காரணத்தினால் விவசாயமும் இல்லை. ஆகையால் மக்களின் வாழ்வாதாரத்திற்கு வேண்டி இந்த குவாரி திட்டங்களுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

12. திரு.சித்திரவேல், புதுக்கோட்டை

- ❖ என்னிடம் 2 டிப்பர் லாரிகள் உள்ளன. ஆகவே எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்காக இந்த குவாரிகளுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

13. திரு.பெரியசாமி, கீழதட்டப்பாறை.

- கடந்த 15 வருடங்களாக குவாரிகளை நம்பி வேலை செய்து வந்தோம்.
- தற்போது வேலை வேண்டி 5 கிலோமீட்டர் தூரம் வரை செல்கிறோம்.
- எனவே, இந்த திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

14. திருமதி.முனியம்மாள், தெற்கு சிலுக்கன்பட்டி.

- நாங்கள் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்து வருகிறோம்.
- இந்த குவாரிகள் அமைவதனால் எங்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்.

15. திருமதி.பேச்சியம்மாள்,மேல தட்டப்பாறை.

- எங்கள் கிராம மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
- எங்கள் கிராம மக்களுக்கு குடிதண்ணீர் இணைப்புக்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**II. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ) அவர்களின் நிறைவுரை**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ) அவர்கள் பொதுமக்கள் குவாரிகள் அமைவதை ஆதரித்து கூறிய கருத்துக்களான வேலைவாய்ப்புகள், பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் பெருகுதல் போன்ற கருத்துகள் அனைத்தும் உள்ளபடியே பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகம் வாயிலாக தமிழக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்து வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

**III.** இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து இந்த திட்டம் அமைய ஆதரவு தெரிவித்து எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் (32 Nos) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – III).

**IV.** இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து இந்த திட்டம் அமைய எதிர்ப்பு தெரிவித்து எழுத்து பூர்வமாக மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

**பொது மக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கையுடன் கீழ்கண்ட ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொது மக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட காணொளி அடங்கிய குறும்பதிவி (எண்ணம் - 2) இணைப்பு I-ல் இணைக்கப்பட்டுள்ளது.
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பற்றிய விபரம் இணைப்பு II-ல் இணைக்கப்பட்டுள்ளது.
3. இந்த திட்டம் அமைவதை வரவேற்று எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் இணைப்பு III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

19/09/2023

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(பொ),
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்.

19/09/2023

தனி மாவட்ட வருவாய் அலுவலர்(நி.எ)
அல்லிகுளம் திட்டப்பணிகள் சிப்காட்